<u>**கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்**</u>

நாள் 25.02.2026

அசல் வழக்கு எண். 98/2008

வா.சா. 1 – சங்கர், த/பெ. கிருஷ்டப்ப நாயக்கர்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

தாத்தா உயில் எழுதிய விவரம் உங்களுக்கு எந்த தேதியில் தெரிய வந்தது என்றால் 2008 ஆம் ஆண்டு தெரிய வந்தது. எப்படி தெரிய வந்தது என்றால் நான் எடுத்துப் பார்த்தபோது தெரிந்து கொண்டேன். அசல் உயில் பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. கூர் சீட்டின் முன்னிலைக்கு உயில் இருப்பதாக தெரிந்து கொண்டேன். கூர் சீட்டு 1976ஆம் ஆண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். கூர் சீட்டின் ஆவணங்கள் நீங்கள் தற்சமயம் வைத்திருக்கிறீர்களா என்றால் வைத்துள்ளேன் என்று சாட்சி 15.06.1976 தேதியிட்ட ஜெராக்ஸ் நகல் கூர் சீட்டு மற்றும் 15.12.1986 தேதியிட்ட ஜெராக்ஸ் நகல் கூர் சீட்டு ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்தார். அது பிரதிவாதியின் வேண்டுக்கோளுக்கிணங்க பிரதிவாதி தரப்பில் **பி.சா.ஆ1 மற்றும் பி.சா.ஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1976 பாகப்பிரிவினை கூர் சீட்டு யார் உங்களுக்கு கொடுத்தது என்றால் என் அம்மா எனக்கு கொடுத்தது ஆகும். அசல் ஆவணம் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னிடம் இல்லை. அசல் உங்களிடம் இருக்கிறது நீங்கள் வேண்டுமென்று அசல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. 1976 கூர் சீட்டில் 1973 உயிலை ரத்து செய்துவிட்டு பஞ்சாயத்தார் முன்னிலையில் கூர் சீட்டு அடிப்படையில் சொத்துக்களை பாகம் பிரித்துக் கொள்வது என கண்டுள்ளது என்றால் எனக்கு எழுத படிக்க தெரியாது. பாப்பாத்தி அம்மாள் என்பவர் கைநாட்டு

வைத்துள்ளார் அவர் உங்கள் தாயார் என்றால் அது எனக்கு தெரியாது. மற்ற நபர்களான கோவிந்தன், ஏழுமலை ஆகியோர் உங்களுடைய பங்காளி பாகஸ்தர்கள் அவர்கள் கையொப்பம் போட்டு உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் உங்களுக்கு என்று சில சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அந்தப் பத்திரத்தில் இரண்டாவது பட்டியல் சொத்து உங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் பட்டியல் சொத்துக்கள் சரவணனுக்கு ஒதுக்கப்பட்டு ஜெயலட்சுமி அம்மாள் கார்டியனாக நியமிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் 3வது பட்டியல் சொத்து சின்னப்ப நாயக்கர் குமாரர் ஏழுமலை நாயக்கருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டியல் சொத்து நான்காவது பட்டியல் சொத்துக்கள் கோவிந்த நாயக்கருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஐந்தாவது பட்டியல் சொத்தில் வசந்த அம்மாள் அவர்களின் திருமண செலவுக்காகவும் ஜெயலட்சுமி அம்மாள் ஜீவனத்திற்காகவும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆறாவது பட்டியல் சொத்து வேலாயுத நாயக்கர் அவரது சுவீகார தகப்பனாரிடம் இருந்து கிடைத்த சொத்துக்கள் அல்லாமல் இந்த குடும்பத்திற்காக உழைத்ததற்காக சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான் அது பற்றி எனக்கு தெரியாது. 1976 கூர் சீட்டின் அடிப்படையில் பி பட்டியல் சொத்து உங்களுக்கு ஒதுக்கப்பட்டது அதனை நீங்கள் 1986 ஆம் ஆண்டு உங்கள் குடும்பத்தினர் இடையே பாகம் பிரித்துக் கொண்டீர்கள் என்றால் நான் அப்பொழுது சின்னப் பையனாக இருந்தேன் எனக்கு தெரியாது. 1986 கூர் சீட்டில் உங்கள் சகோதரர்கள் பொன்னுரங்கம் மற்றும் சீனிவாசன் ஆகியோரது கையொப்பம் உள்ளது என்றால் சரிதான். அந்த

ஆவணத்தில் பாப்பாத்தி அம்மாள் உங்கள் அம்மாவினுடைய கைநாட்டு உள்ளது என்றால் சரிதான். 15.06.1976 தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினை கூர் சீட்டின் அடிப்படையில் தான் 1986 கூர் சீட்டு ஏற்படுத்தப்பட்டதாக வாசகங்கள் கண்டுள்ளது என்றால் எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. 1986 கூர் சீட்டு எதனால் ஏற்படுத்தப்பட்டது என்று தாயார் பாப்பாத்தி அம்மாள் சகோதரர்கள் சீனிவாசன், பொன்னுரங்கம் இடம் கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. சர்வே எண் 313ல் வடக்கு பக்கம் 26 சென்ட் 27.03.1991 தேதியில் பாப்பாத்தி அம்மாள் எனும் உங்கள் தாயார் சங்கரன் என்கிற நீங்கள் கஸ்தூரி என்கிற உங்களது சகோதரி ஆகியோர் மூவரும் சேர்ந்து கிரயம் செய்து கொடுத்தீர்கள் என்றால் சரிதான். அந்த ஆவணம் உங்களிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். அது பிரதிவாதி தரப்பில் **பி.சா.ஆ3**ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணத்தில் கடந்த 15.12.1986 தேதியில் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை கூர் சீட்டின் படி உங்கள் பாகத்துக்கு வந்த சொத்தை விற்பனை செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொன்னுரங்கம் மற்றும் சீனிவாசன் ஆகியோர் 1986 கூர் சீட்டின் படி அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சர்வே நம்பர் 253/2 அடங்கிய 26 சென்ட், சர்வே எண் 315 இல் 40 சென்ட், கொசப்பட்டுசர்வே எண் 10/2 அடங்கிய 21 சென்ட் மற்றும் சில சொத்துக்கள் 19.05.1993 தேதியிட்ட விற்பனை பத்திரம் முன்னிலைக்கு வேலாயுதம் என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான் அனுபவம் வேலாயுதத்திடம் உள்ளது என்றால் சரிதான். வேலாயுதம் என்பவர் செங்கல்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததாகவும்

அது சமாதானமாக முடிக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது பாகப்பிரிவினை வழக்கு என்றால் சரிதான் அதைப்பற்றி பிரமாண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் கட்டில் பார்த்தால் தான் தெரியும். மேற்படி விவரங்கள் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. வேலாயுதம் என்பவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான் அவருக்கு ஒரு கால் ஊனம் என்றால் சரிதான். வேலாயுதம் என்பவர் உங்கள் அம்மா பாப்பாத்தி அம்மாவை அறையில் அடைத்து மிரட்டி கையொப்பம் வாங்கிக் கொண்டார் என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். அந்த விவரம் யார் சொன்னது என்றால் பாப்பாத்தி அம்மாள் என்னிடம் சொன்னார். எந்த வருடம் சொன்னார்கள் என்றால் எனக்கு தெரியாது. மிரட்டி கையொப்பம் வாங்கியதாக சொல்கிறீர்கள் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை. அவ்வாறு மிரட்டி எழுதி வாங்கியதால் செல்லாது என்று வழக்கு ஏதேனும் உங்கள் தாயார் தாக்கல் செய்தார்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. பொன்னுரங்கம் சீனிவாசன் ஏதேனும் சட்டப்படியான நடவடிக்கை எடுத்தார்களா என்றால் எடுக்கவில்லை. பாப்பாத்தி அம்மாள் எழுதிக் கொடுத்த 1976 கூர் சீட்டு ஆவணத்தில் மற்ற பாகஸ்தர்களும் கையொப்பம் போட்டு உள்ளார்கள் அவ்வாறு மிரட்டி வாங்கி இருந்தால் மற்றவர்கள் கையொப்பம் போட்டு இருக்க மாட்டார்கள் என்றால் சரியில்லை. 1976 ஆவணம் சரியான ஆவணம் என்பதால் மீண்டும் 1986இல் அந்த ஆவணத்தின் பின் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டீர்கள் என்றால் சரியில்லை. பொன்னுனுரங்கம் சீனிவாசன் 1986

ஆவணத்தில் கையொப்பம் போட்டுள்ளார்கள் அவர்கள் 1976 பார்க்காமல் கையொப்பம் செய்திருக்க மாட்டார்கள் என்றால் சரியில்லை. தொள்ளாயி கிராமத்தில் நீங்கள் வசித்து வருகிறீர்களா என்றால் நான் வசித்து வரவில்லை. மீண்டும் சாட்சி மாற்றி தொள்ளாயி கிராமத்தில் வசிப்பதாக கூறுகிறார். உங்களுக்கு சொந்தமான இடத்தில் வசிக்கிறீர்களா என்றால் சொந்தமான இடத்தில்தான் வசிக்கிறேன். அதனுடைய சர்வே எண் என்ன என்றால் 54/4 ஆகும். அந்த சொத்து குறித்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்து விட்டேன். எதற்காக வழக்கு தாக்கல் செய்தீர்கள் என்றால் சுவர் இடித்து விட்டதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த சொத்து உங்களுக்கு எப்படி கிடைத்தது என்றால் உயில் மூலம் கிடைத்தது. அந்த சொத்தின் நான்கு புற எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. ஜக்குபந்தி தெரியுமா என்றால் தெரியாது. நான்கு பக்க நீளம் அகலம் தெரியுமா என்றால் தெரியாது. எந்த பக்கத்து சுவர் இடித்தார் தெரியுமா என்றால் தெரியாது. சுவர் இடிக்கவில்லை என்றால் சரியில்லை அவ்வாறு இடித்திருந்தால் திசை தெரியும் என்று சொன்னால் சரி இல்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram.